செய்தி வெளியீடு எண்.757 நாள். 21.11.2007

# 17 தனியார் மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைகள் செய்ய அரசு நிதியுதவி வழங்கும் புதிய திட்டம்

## தனியார் மருத்துவமனைகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து முதலமைச்சர் கலைஞர் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்

மக்களின் வாழ்க்கையில் தற்போதைய மாறிவரும் சூழ்நிலைகள், உணவுப் பழக்க வழக்கங்கள், நடைமுறை வாழ்க்கையில் ஏற்பட்டு வரும் மாறுதல்கள் போன்றவை காரணமாக இதய நோயினால் பாதிக்கப்படுவோர் குறிப்பாக, இளம் சிறார்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இதய நோயினால் பாதிக்கப்படும் குழந்தைகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாக அரசு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக்காகக் குழந்தைகள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ள விவரம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, ஏழை எளிய குடும்பங்களை சார்ந்த குழந்தைகளின் அரிய உயிர்களைக் காக்கும்பொருட்டுத் தற்போது காத்திருப்போர் பட்டியலில் உள்ள 12 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு உடனடியாக அறுவை சிகிச்சைகள் செய்வதற்காக, ஆண்டு வருவாய் 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாயுள்ள குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்குத் தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்வதற்கான புதிய திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் ஏற்கனவே அறிவித்திருந்தார். அதன்படி மூடிய இதய அறுவை சிசிச்சை (Closed Heart Surgery) மேற்கொள்வதற்கு 10 ஆயிரம் ரூபாயும், சாதாரண திறந்த இதய அறுவை சிகிச்சை (Ordinary Open Heart Surgery) மேற்கொள்வதற்கு 30 ஆயிரம்

**ரூபாயும், கடினமான திறந்த இதய அறுவை சிகிச்சை** (Complex Open Heart Surgery) **மேற்கொள்வதற்கு எழுபதாயிரம் ரூபாயும், நிதியுதவி வழங்கும் புதிய திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் இன்று (21.11.2007) கையெழுத்தானது. இவ்வொப்பந்தத்தில் தமிழக அரசு சார்பில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் அவர்களும், 17 தனியார் மருத்துவமனைகளின் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டனர். இந்த ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து, அரசு மருத்துவமனைகளில் இதய அறுவை சிகிச்சைக்காகப் பதிவு செய்துகொண்டு காத்திருக்கும் 20 குழந்தைகளுக்கு உடனடியாக அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ள 10 தனியார் மருத்துவமனைகளுக்குத் தமிழக அரசின் சார்பில் அனுமதிகளை வழங்கி இத்திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்.**

* * *

**இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்திட தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்** (MOU) **செய்து கொண்டுள்ள 17 தனியார் மருத்துவமனைகள்** விவரம் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| **1.** | **ராமச்சந்திரா மருத்துவமனை** | : | **போரூர், சென்னை–116** |
| **2.** | **அப்பல்லோ மருத்துவமனை** | : | **சென்னை–6** |
| **3.** | **பிராண்ட்டியர் லைப் லைன் மருத்துவனை** | : | **சென்னை–101** |
| **4.** | **ஆர்வே ஹெல்த்கேர் லிமிடெட்** | : | **சென்னை–18** |
| **5.** | **மெட்ராஸ் மெடிக்கல் மிஷன்** | : | **சென்னை–37** |
| **6.** | **கே.ஜெ. மருத்துவமனை** | : | **சென்னை–84** |
| **7.** | **சூரியா மருத்துவமனை** | : | **சென்னை–93** |
| **8.** | **மியாட் மருத்துவமனை** | : | **மனப்பாக்கம், சென்னை–89** |
| **9.** | **லைப்–லைன் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை** | : | **சென்னை–96** |
| **10.** | **செட்டிநாடு மருத்துவமனை** | : | **கேளம்பாக்கம் காஞ்சிபுரம் மாவட்டம் – 606103** |
| **11.** | **வடமலையான் மருத்துவமனை** | | **மதுரை–625002** |
| **12.** | **அப்பலலோ ஸ்பெஉாலிட்டி மருத்துவமனை** | | **மதுரை–625020** |
| **13.** | **மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம்** | | **மதுரை–625107** |
| **14.** | **பி.எஸ்,ஜி.மருத்துவமனை** | | **கோயம்புத்தூர்–642004** |
| **15.** | **ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனை** | | **கோயம்புத்தூர்––641044** |
| **16.** | **கே.ஜி.மருத்துவமனை** | | **கோயம்புத்தூர்––641018** |
| **17.** | **ஜி.குப்புசாமிநாயுடு நினைவு மருத்துவமனை** | | **கோயம்புத்தூர்––641037** |

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**